புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜுலை 18, 2019 | புரட்சி 18 | முழக்கம் 27 | விலை: ரூ.3.00

# மண்ணின் மைந்தர்கள் உரிமைகளைப் பறிக்காதே!

# ஆக. 26-31 வரை கழகத்தின் பரப்புரை 5 முனைகளிலிருந்து தொடங்குகிறது

## கழகத்தின் தலைமைக் குழு முடிவு

திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு, ஜுலை 13, 2019 பிற்பகல் 2.30 மணியளவில் மேட்டூரில் தாய்த் தமிழ்ப் பள்ளியில் கூடியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நிகழ்ந்த குழுவின் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன், வெளியீட்டுச் செயலாளர் கோபி. இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, முகநூல் பதிவு பொறுப்பாளர் பரிமள ராசன், இணையதள பொறுப்பாளர் விஜயகுமார், சென்னை இரா. உமாபதி, விழுப்புரம் அய்யனார், மடத்துக்குளம் மோகன், மேட்டூர் சக்திவேல், காவலாண்டியூர் ஈசுவரன், சூலூர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழகக் கட்டமைப்பு நிதி வரவு குறித்து நன்கொடையாளர்கள் அளித்த நிதி விவரங்களை தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன் விரிவாக எடுத்துரைத்தார். தலைமைக் கழகக் கட்டிடத்தை மறு சீரமைப்பு செய்வது குறித்தும் விவாதிக்கப் பட்டது. விரைவில் கூடவிருக்கும் செயலவைக் கூட்டத்தில் மாவட்ட வாரியாகப் பெற்ற நன்கொடை குறித்து விரிவாக விவாதிக்க முடிவு செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் கழகம் நடத்தி வரும் பரப்புரைப் பயணம் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது. மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு ஒவ்வொரு நாளும் தமிழர் உரிமைகளுக்கு எதிரான அதிரடி அறிவிப்புகள் வந்து கொண்டிருப்பதை உறுப்பினர்கள் கவலையுடன் பகிர்ந்து கொண்டனர். இந்தியாவிலே பெரியார் மண்ணாகத் திகழும் மதவெறி சக்திகளுக்கு இடமளிக்காத - பார்ப்பன எதிர்ப்பு சமூக நீதி கருத்துகளை ஆழமாக உள்வாங்கிக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டையும் திராவிட இயக்கங்களையும் குறி வைத்துத் தாக்கி வரும் பார்ப்பன - பா.ஜ.க. - சங்பரிவார் சக்திகள் குறித்தும் தோழர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

சமஸ்கிருதம் - இந்தியைத் திணிப்பதோடு வடநாட்டுக்காரர்களையும் தமிழ்நாட்டு அரசு வேலைகளில் திணித்து வரும் போக்கு அதிகரித்து வருவதையும், கஸ்தூரி ரங்கன் குழு வெளியிட்டுள்ள கல்விக் கொள்கை மீண்டும் குலக் கல்வித் திட்டத்தைத் திணிக்கும் ஆபத்துகளைக் கொண் டிருப்பதையும் தலைமைக் குழு விவாதித்தது. மண்ணின் மைந்தர்களின் மொழி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, இடஒதுக்கீடு உரிமைகளைப் பறிப்பதையும் 10 சதவீத பொருளாதார அடிப்படை யிலான உயர்ஜாதியினருக்கான இடஒதுக்கீட்டைத் திணிப்பதையும் கண்டித்தும், ஜாதி வெறியைத் தூண்டி அதன் வழியாக மத வாதத்துக்குள் ஜாதிக் குழுக்களைக் கொண்டு வந்து ‘இந்து மத’ வெறியைக் கட்டமைத்து பா.ஜ.க.வை வளர்க்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் சூழ்ச்சித் திட்டங்களையும் விரிவாக தோழர்கள் பகிர்ந்தனர். பரப்புரை இயக்கத்தை மண்ணின் மைந்தருக்கான உரிமை கோரும் இயக்கமாக நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆகஸ்டு 26, 2019இல் பயணம் தொடங்கி, ஆக. 31இல் நிறைவு செய்வது என்றும் பயண நிறைவு விழாவை மேட்டூரில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. சென்னை, மேட்டூர், திருப்பூர், மயிலாடுதுறை, விழுப்புரம் பகுதிகளிலிருந்து 5 பயணக் குழுக்கள் புறப்படுகின்றன. பயணக் குழு பொறுப்பாளர்களாகக் கீழ்க்கண்டவர்களை தலைமைக் குழு முடிவு செய்தது.

சென்னை - இரா. உமாபதி; மேட்டூர் - சி.கோவிந்த ராஜ் (ஜி.பி.), திருப்பூர் - சூலூர் பன்னீர்செல்வம்; மயிலாடுதுறை - இளையராஜா; விழுப்புரம் - அய்யனார்.

அண்மைக்காலமாக ஜாதி ஆணவப் படுகொலை, தமிழகத்தில் அதிகரித்து வருவதை தலைமைக் குழு விவாதித்தது. ஜுலை 23ஆம் தேதி கோவையில் ஜாதி வெறி - ஆணவப் படுகொலைகளைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலம், மேட்டூர் உள்ளிட்ட பகுதிகளைச் சார்ந்த தோழர்கள் பெருமளவில் பங்கேற்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அதேபோல் சென்னையில் ஜுலை 26 அன்று மண்ணின் மைந்தருக்கே வேலை கொடு எனும் முழக்கத்தை முன் வைத்து, பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், புதுவைக் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் பெருமளவில் பங்கேற்கச் செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.



## தோழர்களே, கோவைக்குத் திரளுவீர்!

தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகள் தலைவிரித்தாடுகின்றன.

ஜாதிகளைக் கடந்து ஒருவரையொருவர் விரும்பி திருமணம் செய்து கொள்ள அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை ஜாதிவெறிக் கூட்டம் கையில் எடுத்துக் கொண்டு வீச்சறிவாளையும் கத்தியையும் தூக்கிக் கொண்டு வருகிறது.

‘நாம் எல்லோரும் இந்துக்கள்’ என்று மதவாதம் பேசும் கூட்டம், இந்துக்களுக்குள்ளே நடக்கும் ‘ஜாதிக் கொலைகளை’ எதிர்க்காமல் மவுனம் சாதிக்கிறது.

தமிழ்நாட்டில் ஜாதி ஆணவப் படுகொலைகளே நடக்கவில்லை என்கிறது, தமிழக அரசு!

ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் சட்டத்தையும் கொண்டுவர மறுக்கிறது, மத்திய சட்ட ஆணையம். ஜாதியப் படுகொலைகளைத் தடுக்கும் மசோதாவைத் தயாரித்து 2011ஆம் ஆண்டு நடுவண் ஆட்சிக்கு அனுப்பி பல ஆண்டுகளாகியும் மசோதா கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

ஜாதி ஆணவப் படுகொலைகள் குறித்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு மாநில அரசுகளுக்கு 2016ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. 22 மாநில அரசுகள் பதிலளித்து விட்டன. தமிழ்நாடு மட்டுமே பதிலளிக்கவில்லை.

இளைஞர்கள் ஜாதி மறுப்புத் திருமணம் செய்ய முன் வந்தால் முதியவர்கள் அதைத் தடுக்கக் கூடாது என்று உயர்நீதிமன்றங்கள் அறிவுறுத்தியும் ஜாதி வெறியர்கள் காதில் விழ மறுக்கிறது.

இன்னும் எத்தனை உயிர்களை ஜாதி வெறி காவு கேட்கப் போகிறது?

ஜாதி அமைப்பு மட்டுமே ‘இந்து’ மதத்தின் பாதுகாப்புக் கவசம். இந்து மதம் மட்டுமே அதைத் தன் வசப்படுத்திக் கொண்ட பார்ப்பனர்களின் உயிர் நாடி!

எனவே ‘ஜாதி கரைப்பு’, ‘ஜாதி மறுப்பு’, ‘ஜாதி ஒழிப்பு’ என்று சமூகம் பயணிக்கத் தொடங்குவதைப் பார்ப்பனர்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்.

‘குடும்ப கவுரவம்’, ‘சொந்த பந்தங்கள் கேவலமாகப் பேசும்’ என்ற உணர்வுகளைத் தூண்டிவிட்டு ஜாதி ஆணவப் படுகொலைகளை நடத்துகிறார்கள்.

உடன் பிறந்த சகோதரன் – பெற்ற மகள் இரத்தங்களையே பரிசாகக் கேட்கிறது – ஜாதி வெறி.

இந்த ஆணவப் படுகொலைகளை எதிர்த்து, குரல் கொடுக்க ஜாதி வெறி சக்திகளுக்கு கடும் எச்சரிக்கையும் எதிர்ப்பையும் தெரிவிக்க;

கழகத் தோழர்களே! கோவைக்குத் திரளுவீர்!

நாள் : ஜுலை 23, 2019 செவ்வாய் மாலை 4 மணி

இடம் : கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்கிறார்!

திரண்டு வாரீர், தோழர்களே!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.07.2019

# மாநாட்டில் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# அணுக்கழிவுகளைப் புதைக்கும் பாதுகாப்பான இடம் உலகில் எங்குமே இல்லை

**கூடங்குளத்தில் 'அணுக் கழிவு மய்யம்' அமைக்கும் நடுவண் அரசின் ஆபத்தான திட்டத்தை எதிர்த்து அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் 14.7.2019 அன்று சென்னை பத்திரிகையாளர் சங்கத்தில் ஒரு நாள் எச்சரிக்கை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் பங்கேற்று கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:**

காலையிலிருந்து மாநாட்டில் தொடர்ந்து பங்கேற்று கருத்துகளைக் கேட்டு வருகிறீர்கள். அணுஉலை ஆபத்துகளை ஆழமாக உணர்ந்து, அதைத் தடுத்து நிறுத்தி, நமது மண்ணை மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையும் உறுதியும் கொண்டவர்கள் என்பதாலேயே காலை முதல் அர்ப்பணிப்பு உறுதியுடன் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்.

கூடங்குளத்தில் 6 அணுஉலைகளைக் கொண்டு வந்து அணுஉலைப் பூங்காவாகவே மாற்றுகின்றன நடுவண் ஆட்சிகள். இப்போது பா.ஜ.க. ஆட்சி உலகிலேயே மிக மிக ஆபத்தான 'அணுக்கழிவு கருவூலம்' என்ற சேமிப்பு கிடங்கினையும் தமிழ்நாட்டிலேயே அமைக்கப் போகிறதாம். அணுக்கழிவு கருவூலம் அல்லது வைப்பகம் ஆபத்துகளை விளக்கி சூழலியல் ஆய்வாளர் நக்கீரன் எழுதிய சிறு வெளியீடு ஒன்று இங்கு இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. சிறு பிரசுரம் என்றாலும் அதில் கூறப்பட்டுள்ள கருத்துகள் மிக மிக வலிமையானவை. அதிலிருந்து சில கருத்துகளை சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

- அணுக்கழிவை தாழ்நிலைக் கழிவுகள், இடைநிலைக் கழிவுகள், உயர்நிலைக் கழிவுகள் என்று மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். மின்சக்தியைத் தயாரிக்கும் அணுஉலைக்குள்ளே அணுக்கள் பிளக்கப்பட்டு, பீட்டா, ஆல்பா, காமா என்ற மூன்று வகைக் கதிர்கள் உருவாகின்றன. மின்உற்பத்தி செய்யும் ரியாக்டரில் எந்தப் பொருளும் எரிவதில்லை. பயன்படுத்தப்படும் யுரேனியம் பிளவுபட்டு நியுட்ரான்களை வெளியிடுகிறது. இந்த நியுட்ரான் யுரேனியத்தை மேலும் மேலும் பிளவுபடுத்தும் தொடர் வேலையை செய்து கொண்டே இருக்கிறது. இந்தத் தொடர் செயல்முறைகளால் மேலும் பல கதிர்வீச்சுகள் உருவாகின்றன. சீசியம், அயோடின், ஸ்ட்ரான்சியம் என்று அவைகளுக்குப் பெயர்.
- பீட்டா கதிர்வீச்சைத் தடுக்க உலோகம் வேண்டும். காமா கதிர்வீச்சு மிக மிக ஆபத்தானது. மிகப் பெரிய பருமன் கொண்ட உலோகத்தால்தான் அதைத் தடுக்க முடியும். ஆல்பா, பீட்டா, காமா என்ற மூன்று வகை ஆபத்தான கதிர்வீச்சுகள்தான் இப்போது 'அணுக்கழிவு' என்று கூறப்படுகிறது.
- 100 ஆண்டுகள் கதிர்வீச்சுத் தன்மைக் கொண்டவை; 300 ஆண்டுகள் கதிர்வீச்சுத் தன்மைக் கொண்டவை; 500 ஆண்டுகள் கதிர்வீச்சுத் தன்மைக் கொண்டவை என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். குறைந்த ஆபத்துகளை உருவாக்கும் கதிர்வீச்சு என்பதே நூறு ஆண்டுகள் வரை ஆபத்தானது என்பதை நாம் உணர வேண்டும். 500 ஆண்டுகள் வரை ஆபத்தான கதிர்களை வீசக்கூடிய அணுக்கழிவுகளை அப்படியே சேமித்து வைக்க வேண்டும் என்றால் மனித சமூகம் அதுவும் நாகரிகமுள்ள ஒரு மனித சமூகம் அதை ஏற்க முடியுமா? அந்த ஆபத்து இப்போது தமிழன் தலையில் சுமத்தப்படுகிறது.
- நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவியலில் வளர்ச்சி அடைந்த நெதர்லாந்து 300 ஆண்டுகள் கதிர்வீச்சைப் பாதுகாக்கும் அதி நவீன வைப்பகம் ஒன்றை உருவாக்கியுள்ளது. 'லிசின் ஜென் ஊஸ்ட்' என்னுமிடத்தில் இது அமைந்துள்ளது. 65 ரிக்டேர் நில நடுக்கத்தையும் 10 மீட்டர் உயர கடல் அலைகளையும் தாங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட இந்த வைப்பகத்தில் இவற்றை எல்லாம் மீறி 'அணுக்கதிர் வீச்சு' வெளியாகிக் கொண்டிருக்கிறது. அதாவது 1986இல் இரஷ்யாவில் செர்னோபிள் அணுஉலை விபத்தில் வெளியாகி வளி மண்டலத்தில் கலந்த கதிர்வீச்சைவிட இரண்டரை மடங்கு அதிகமாக வெளி வந்து கொண்டிருப்பதாக உலகப் புகழ் பெற்ற சுற்றுச் சூழல் ஏடான 'ஜியோ' ஒளிப்பட ஆதாரங்களுடன் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. உலகத்தையே இந்த செய்தி அச்சுறுத்தியுள்ளது.
- தீர்ந்து போய் விட்டது; எரிந்து முடிந்து விட்டது என்று சொல்லப்படுகிற அணுஉலைகளில் பயன்படுத்தப்படும் எரி உருளைகளிலும் 'புளூட்டோனியம்' என்ற கதிர்வீச்சு இருந்து கொண்டே இருக்கும். இது கட்டுப்படுத்தக் கூடியதுதான் என்றும், அவ்வளவு ஆபத்தானது அல்ல என்றும் கூறுகிறார்கள். ஆனால் இத்தகைய புளூட்டோனியம் வகையில் (புளூட்டோனியம் 239) ஒரு கிராம் அளவில் பத்து இலட்சத்தில் ஒரு பங்கு நம் உடலில் நுழைந்தால்கூட அது நுரையீரல், கல்லீரல், எலும்புகளில் சேர்ந்து புற்று நோயை வரவழைக்கும்.
- அணுக்கழிவுகளை நிரந்தரமாக புதைக்கக் கூடிய வைப்பகம் - எவ்வாறு அமைய வேண்டும் என்பதை 2002இல் ஜெர்மானிய விஞ்ஞானிகள் அறிவித்தனர். இவர்கள் வகுத்த விதிமுறைகள்படி ஆபத்து இல்லாத வைப்பகம் அமைக்கக்கூடிய இடம் - உலகத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவே இல்லை. நிலத்துக்குக் கீழே உள்ள உலகின் அனைத்துப் பாறைகளையும் ஆய்வு செய்து முடித்தாகிவிட்டது. கடைசியாக நான்கு நிலத்தடி பாறைகள் இறுதி செய்யப்பட்டன. இருந்தாலும் இன்னமும் பொருத்தமான பாறை கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறார் சுவிஸ் நாட்டைச் சார்ந்த அணுப் பாதுகாப்பு ஆணையத்தைச் சார்ந்த மார்கஸ் புஸர்.
- அமெரிக்காவில் இப்படி அணுக்கழிவுகளை சேமிப்பதற்கு எரிமலைப் பகுதியை 1987இல் தேர்வு செய்தார்கள். நெருப்பைக் கக்கும் சாம்பல் எரிமலைப் பகுதியில் கதிரியக்க வீச்சு ஆபத்துகள் இருக்காது என்று முடிவு செய்தார்கள். யுக்கா என்ற மலைத் தொடர் பகுதி தேர்வு செய்யப்பட்டது. அமைக்கப்பட்ட பிறகு 600 நில நடுக்கங்கள் நடந்தன. நீரில் கதிர்வீச்சு ஊடுறுவுவது கண்டறியப்பட்டது. 1500 கோடி டாலரில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் 2009 ஜூலையில் ஒபாமா ஆட்சிக் காலத்தில் ஆபத்து கருதி நிறுத்தப்பட்டது.
- கூடங்குளத்துக்கும் இது பொருந்தும். 1998இல் கூடங்குளம் அருகே உள்ள கிராமங்களான ஆனைக் குளம், பாண்டிச்சேரி; 1998இல் திருநெல்வேலி, அபிஷேகப்பட்டி; 1999இல் திருப்பணிக்கரிசல் குளம்; 2001இல் சுரண்டை சுக்கலி நத்தம் ஆகிய ஊர்களில் சிறிய அளவிலான எரிமலை வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.
- கதிர் இயக்கக் கழிவுகளின் ஆபத்தை உலக நாடுகள் உணர்ந்தே இருக்கின்றன. ஆனால் வெளியே ஒப்புக் கொள்வது இல்லை. இதற்காக அவர்கள் தீட்டிய கற்பனைக்கே எட்டாத திட்டங்களை அறிந்து கொண்டாலே இந்த உண்மை புரியும். அணுக் கழிவைக் கலன்களில் அடைத்து விமானத்தில் ஏற்றி, வானிலிருந்து அண்டார்டிகா பனிப் பிரதேசத்தில் வீசிவிடலாம் என்று திட்டமிட்டு 1956 முதல் இது விவாதிக்கப்பட்டு வருகிறது.
- இன்னும் ஒரு படி மேலே போய் அமெரிக்க விஞ்ஞானிகள் சூரியனுக்குள் புதைத்து விடலாம் என்று ஆலோசித்து, கூடுதல் செலவு கருதி இத்திட்டத்தை கைவிட்டனர்.

அணுக்கழிவு எவ்வளவு கொடூரமான மனித குலத்தை நாசமாக்கக் கூடியது என்பதற்கு இவை எல்லாம் சான்றுகள்.

- கிரிகோரி ஜேசிஸ்கோ என்ற அணுவியல் விஞ்ஞானி, இரண்டு ஆண்டுகாலம் அமெரிக்க மின் அணு மின்சார உற்பத்தி அமைப்பின் தலைமைப் பொறுப்பில் ஒபாமா ஆட்சிக் காலத்தில் இருந்தவர். புக்குஷிமா விபத்தைத் தொடர்ந்து உலகம் முழுதும் அணுமின் உலைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பிய காலத்தில் அந்த ஆபத்து தற்காலிகமானது. அணுமின் பாதுகாப்பானது என்று அணுதிட்டங்களை நியாயப் படுத்தியவர். இப்போது அனுபவ ரீதியாக அதன் ஆபத்துகளை உணர்ந்து பதவியிலிருந்து விலகி, காற்றாலை மின் உற்பத்திக்கான கருவிகளை தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவியிருக்கிறார். 'கொடூரமான அணுமின் ரியாக்டரின் ஒப்புதல் வாக்குமூலம்' (Confession of a Rogue Nuclear reactor)) என்ற நூலை எழுதியிருக்கிறார். அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள், அணுமின் உற்பத்தியை நிறுத்தத் தொடங்கியிருப்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

நீட், இந்தி, வடவர் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, மதவெறித் திணிப்போடு என்று தமிழர்கள் மீது பல சுமைகளைத் திணிக்கும் மோடி ஆட்சி இப்போது அணுக்கழிவுகளையும் திணிக்கத் திட்டமிடுகிறது, என்றார் விடுதலை இராசேந்திரன்.

## 2024இல் இந்து இராஷ்டிரமாக இந்தியா அறிவிக்கப்படுமாம்

உத்தரப்பிரதேச மாநில பாஜக எம்எல்ஏ-வாக இருப்பவர், சுரேந்திரா சிங். வாயைத் திறந்தாலே இஸ்லாமிய எதிர்ப்பும், வெறுப்புமாக கொட்டித் தீர்ப்பவர். அந்த வகையில், மீண்டும் இஸ்லாமியர்கள் மீது வன்மத்தைக் காட்டியுள்ளார். இதுதொடர்பான வீடியோக்கள் சமூகவலைத் தளங்களில் வெளியாகியுள்ளன. அந்த வீடியோக்களில் ஒன்றில், "இஸ்லாமியர்கள் 50 மனைவிகளை மணமுடித்து 1050 குழந்தைகளைப் பெற்றெடுப்பவர்கள்" என்றும், "இது பாரம்பரியம் அல்ல, மிருகத்தனமான செயல்" என்றும் தனது வக்கிரத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதேபோல, "2024ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். துவங்கப்பட்டு 100ஆண்டுகள் நிறைவடைகின்றது; அந்த ஆண்டில் இந்தியா இந்து இராஷ்ட்ராவாக அறிவிக்கப்படும்" என்றும் மற்றொரு வீடியோவில் குறிப்பிட்டுள்ள சுரேந்திரா சிங், "மேற்கு வங்க மாநிலம் இலங்கை போன்றது; இராமரைப் போன்று தாங்கள் ஏற்கெனவே பாதி மேற்கு வங்கத்தை சிதைத்து விட்ட நிலையில், சட்டமன்றத் தேர்தல் முடிவின்போது மீதமுள்ள மேற்கு வங்கமும் சிதைக்கப்படும்" என்றும் ஆணவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

# வர்ணாசிரம கல்விக் கொள்கை

இந்தியாவில் ஆரியர்கள் குடியேறிய பின் அதிகாரம் பெற்றவர்களாக மாறினார்கள். வேதங்கள் உருவாக்கப்பட்டன. இந்துத்துவா கொள்கையை வேலையின் அடிப்படையில் நான்கு வர்ணங்களை உருவாக்கினார்கள். முதல் மூன்று வர்ணங்களும் சேர்ந்து மனித சமூகத்திற்கு உழைப்பாளிகளாக இருந்த மக்களை அடிமைப்படுத்தினார்கள். அவர்கள் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அக்காலக்கட்டத்தின் குருகுல கல்வி முறை உருவானது. வேதங்கள் கற்றுக் கொள்வதும் கொடுப்பதும் பிராமணர்கள், ஆட்சி புரிபவர் சத்திரியர், வியாபாரம் செய்பவர்கள் வைசியர்கள். இவர்களே கல்வி கற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. சூத்திரர், பஞ்சமர் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டது. அவர்கள் வேதங்களை கேட்டாலே காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுங்கள் என்று மனுதர்ம கோட்பாடு கூறுகிறது. அக்கால கட்டத்தில் மறைந்திருந்து வில்வித்தை கற்ற வேடர் சமூகத்தை சேர்ந்த ஏகலைவன் கட்டை விரல் வெட்டப்பட்டது வர்ணாசிரம கோட்பாட்டின் அடிப்படையில் தான்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பொதுக் கல்வி முறை 1968இல் கோத்தாரி கமிஷனால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் இலவசக் கல்வி பெறுவதற்கு, கல்வி உரிமைச்சட்டம், அமல்படுத்தப்படாததால் பெரும்பகுதியான மக்கள் கல்வி அற்ற நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அவர்கள் கல்வி அறிவு பெற முடியாததற்கு மிக முக்கிய காரணம் வறுமை தான். மத்திய அரசு வசதிபடைத்தவர்களுக்கு அனைத்து வசதியும் கொண்ட நவோதயா பள்ளிகளை உருவாக்கின. ஏழை மாணவர்களுக்கு வகுப்பறை, கழிப்பிடம், குடிநீர் வசதி, விளையாட்டு மைதானம் ஆசிரியர்கள் பற்றாக் குறையுள்ள அரசுப் பள்ளிகள் உருவாக்கப்பட்டன.

**புதிய கல்விக் கொள்கை :** 1991இல் புதிய பொருளாதாரக் கொள்கை அமல்படுத்தப்பட்ட பின் கல்வி, மருத்துவம் ஆகியவை தனியார்க்கு தாரை வார்க்கப்பட்டன. மத்திய அரசு கொண்டு வந்த புதிய கல்விக் கொள்கையும் ஏழைகளுக்கு ஒரு கல்வியும், வசதி படைத்தவர்களுக்கு சிபிஎஸ்இ மெட்ரிக் பள்ளிகளையும் உருவாக்கின. 120 கோடிக்கு மேல் உள்ள இந்திய மக்களில் 40சதவீதம் மக்கள் கல்வியற்றவர்களாக இருக்கிறார்கள். கல்வி உரிமைச்சட்டம் 2009இல் கொண்டு வரப்பட்டு 01.04.2010 முதல் அமலுக்கு வந்தது. ஆனால் தனியார் பள்ளிகளின் கொள்கை மாற்றப்படவில்லை. அதனால் மூன்று கல்விக் கொள்கைகளாலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத் தப்பட்ட மக்களின் கல்வி நிலை இன்னும் உயர வில்லை.இந்நிலையில் மத்திய பாஜக அரசு தேசிய கல்விக்கொள்கை வரைவை வெளியிட்டிருக்கிறது.

**தேசிய கல்விக் கொள்கை 2019 வரைவு அறிக்கை :** அனைவருக்கும் உயர் தரக்கல்வி வழங்குவதன் மூலம் நமது தேசத்தை ஒருங்கிணைந்த மற்றும் துடிப்பான அறிவுமிக்க சமுதாயமாக மாற்று வதற்கு நேரடியாக பங்களிக்கும் விதமாக இந்தியை மையமாகக் கொண்ட கல்வி முறையாக தேசியக்கல்வி கொள்கை 2019 (வரைவு) கருதப்படுகிறது.

**பள்ளிக்கல்வி அமைப்பு முறை :** பள்ளிக்கான பாடத்திட்ட வரையறை (கலைத்திட்டம்) 1968 இல் (10+2) பள்ளிக்கல்வி 12 ஆண்டுகளாக மாற்றப்பட்டு 1 - 5 வகுப்பு தொடக்கப்பள்ளி, 6 - 8 வகுப்பு நடுநிலைப் பள்ளி, 9-10 உயர்நிலைப்பள்ளி, 11-12 வகுப்பு மேல் நிலைப்பள்ளிகள் என உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாநில அரசின் கல்விக் கொள்கைகள் எல்கேஜி, யுகேஜி 1 - 5 வகுப்பு வரை புற்றீசல் போல் நர்சரி பள்ளிகளை உருவாக்கியதால் - அரசு பள்ளி களில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தன. தேசியக் கல்விக் கொள்கை பாடத்திட்ட வரையறை (கலைத்திட்டம்) (5+3+3+4) 5 வருடம் அடிப்படை நிலை- பிரிகேஜி, எல்கேஜி, யுகேஜி மற்றும் 1, 2 வகுப்பு களும், 3 வருடம் ஆயத்த நிலை - 3, 4, 5 வகுப்புகளும், 3 வருடம் நடுநிலை - 6, 7, 8 வகுப்பு களும், 4 வருடம் உயர் நிலை அல்லது இடைநிலை 9, 10, 11, 12 வகுப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அரசு பால் வாடிப்பள்ளிகள் தொடக்கப் பள்ளியோடு இணைக் கப்படுவதால் பிரிகேஜி, எல்கேஜி, யுகேஜி மற்றும் 5 ஆம் வகுப்பு முறை பாடச்சுமை அதிகரிக்கப்படு கிறது. அவர்களின் உடல்நலம், மனநலம் பாதிக்கக் கூடிய நிலைக்கு குழந்தைகள் தள்ளப்படுகிறார்கள். கோத்தாரி கமிஷன் கல்வி முறையில் அருகமை தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் படிக்க வாய்ப்பு உருவாகும். தற்போதைய கல்விக் கொள்கையால் தொடக்க, நடுநிலைப்பள்ளியில் படிக்கும் குழந்தை களுக்கு கல்வி கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

**தொழிற்கல்வி முறை கல்வியும் திறன்களும் :** வாழ்க்கைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி: பல்வேறு தொழில்கள் 3, 4, 5 வகுப்புகளில் குழந்தைகளுக்கு தோட்டக்கலை, மண்பாண்டம் செய்தல், மரவேலை குறித்து அருகில் உள்ள பயிற்றுநர்கள் மாணவர் களுக்கு கற்றுக் கொடுப்பார்கள்.6 வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை வருடம் முழுவதும் மரவேலை, மின்துறை சார்ந்த வேலை, தோட்டக்கலை, மண்பாண்ட வேலைகள், விவசாயம் கற்றுக் கொடுப்பது. கல்வி உரிமைச்சட்டம், 18 வயது குழந்தை கள் கல்வி கற்பது.இந்தக் கொள்கை அதை ஒழித்து தொழிற்கல்வி என்ற பெயரில் வர்ணாசிரம கல்வி முறையை மீண்டும் உருவாக்குகிறது.

**தேர்வுமுறைகள் :** 1 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிகளில் நடைபெறும் பொதுத் தேர்வுடன் நிறுத்தாமல் 3, 5, 8 வகுப்புகளுக்கு மாநில அரசுகளால் மாநில அளவில் பொதுத்தேர்வு நடத்தப்படும். கல்வி உரிமைச்சட்டம் வழங்கி யுள்ளபடி கல்வி வழங்குவதை உறுதிப்படுத்தாமல் தேர்வுகள் மூலம் மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவதோடு 8 ஆம் வகுப்பிற்கு மேல் பள்ளிப் படிப்பை தொடரவிடாமல் செய்வதே இந்த தேசிய கல்விக் கொள்கையின் உள் நோக்கமாகும்.

**ஆசிரியர்களின் பணி நிலை :** இந்தியாவில் 10 இலட்சம் ஆசிரியர் பணி இடங்கள் காலியாக உள்ளன என வரைவு அறிக்கை கூறுகிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்காமல் டெட் (TET) தேர்வு மூலம் பணி நியமனம் கட்டாயமாக்கப்படும். ஆசிரியர்களுக்கு ஊதியம், பதவி உயர்வு, தகுதி மற்றும் திறன் அடிப்படையில் வழங்கப்படாமல் வயது மூப்பு அடிப்படையிலே வழங்கப்படுவது தடுத்து, தகுதி திறன் என்று தேர்வு மூலம் ஊதிய உயர்வு, பதவி உயர்வு வழங்கப்படுவது சமூக நீதிக்கும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் எதிரானதாகும்.

**இடைநிற்றல் மாணவர்கள் நிலை :** 2030ஆம் ஆண்டிற்குள் 3 முதல் 18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி வழங்க வேண்டும். U.DISE மூலம் மாவட்ட வாரியாக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி தரத்தின் அடிப்படையில் 2016-2017ஆம் ஆண்டிற்கான தேர்ச்சி விகிதம். வரைவு அறிக்கை பகுதி 39ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது ஐந்தாம் வகுப்பிற்கு பின் மாணவர்களின் இடைநிற்றல் அதிகமாக உள்ளது. 2015 ஆம் ஆண்டு தேசிய அளவில் 6.2 கோடி குழந்தைகள் (வயது 6-18) பள்ளியைவிட்டு விலகி யுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு | - | 95.1 % |
| 1 - 8 வகுப்பு வரை | - | 90.7 % |
| 9-10 வகுப்பு வரை | - | 79.3 % |
| 11-12 வகுப்பு வரை | - | 51.3 % |

பள்ளிக்கும் வீட்டுக்கும் இடைப்பட்ட தொலைவு அதிகம் உள்ளதால் இடைநிற்றல் அதிகமாக உள்ளது. நவீன டிஜிட்டல் இந்தியாவை உருவாக்கு கிறோம் என்று முழக்கமிடும் மத்திய அரசு வர்ணாசிரமக்கல்விக் கொள்கையை தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் உருவாக்கி 8 ஆம் வகுப்பிற்கு மேல் படிப்பை தொடரவிடாமல் குலத் தொழிலுக்கு தள்ளிவிடுகிறது. தட்டுத்தடுமாறி பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பெறுவதற்கு தடையாக நீட் (NEET), ஜேஇஇ போன்ற தொழிற் கல்விகளுக்கு நுழைவுத் தேர்வும் பட்டப்படிப்புக்கும் நுழைவுத்தேர்வு நடத்துவது உயர் கல்வி பெறாமல் தடுப்பதாகும். இந்த கல்விக் கொள்கை பணம் இருந்தால் படிக்க லாம்; இல்லையேல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்கிற நிலையையே உரு வாக்கும். இந்த வரைவு அறிக்கையை நடைமுறைப் படுத்தினால் இந்திய நாட்டில் கோடிக்கணக்கான ஏழைகளுக்கு கல்வி கேள்விக்குறி யாகும் ஆபத்தான நிலை உள்ளது. மாநில அரசுகளின் உரிமையை பறிப்பதோடு வசதி படைத்தவர்களுந்தான் கல்வி என்று ஆகிவிடும் ஆபத்து உள்ளது. இத்தகைய இந்துத்துவா கொள்கையை தடுத்திட இந்தியாவில் உள்ள கல்வியாளர்கள், அறிவு ஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சேர்ந்து போராடு வதன் மூலம் தான் சமமான வாய்ப்புள்ள வேறு பாடற்ற கல்விக் கொள்கையை உருவாக்க முடியும்.

**நன்றி : 'தீக்கதிர்'**

**கட்டுரையாளர் – அ. மணவாளன்**

## 10 சதவிகித இடஒதுக்கீட்டை அமுல்படுத்த பணியிலிருக்கும் ஆசிரியர்கள் நீக்கம்

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த, தில்லிப் பல்கலைக்கழகம் மிகவும் அவசரகதியில் நடவடிக்கை எடுத்திருப்பதன் காரணமாக தற்சமயம் பணியிலிருக்கும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனைக் கண்டித்து, தில்லிப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைமையில், ஆசிரியர்கள், இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்துகிறோம் என்ற பெயரில், தில்லிப் பல்கலைக் கழக நிர்வாகமானது, தற்போது பணியிலிருக்கும் தற்காலிக ஊழியர்கள் நூற்றுக்கணக்கானவர்களை வேலையை விட்டு நீக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதாக, தில்லிப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ரபிப் ராய் குற்றம் சாட்டியுள்ளார். தில்லி பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கை சரியல்ல என்றும், தற்சமயம் பணியி லிருக்கும் ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்படாத விதத்தில் கூடுதல் பணியிடங்கள் உருவாக்கும் வரை, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கான இட ஒதுக்கீடு அமலாக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் இந்த கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று பல்கலைக் கழக மானியக்குழு, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றுக்கு, ஆசிரியர் சங்கம் சார்பில் கடிதங்களும் எழுதப்பட்டு உள்ளன. இப்பிரச்சினையில் பல்கலைக் கழகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக, ஆசிரியர்கள் திங்களன்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். செவ்வாய்க்கிழமையன்றும் போராட்டம் தொடர உள்ளது.

## டாக்டர் அறிவுக்கரசி நன்கொடை

மேட்டூர் மார்டின்-விஜயலட்சுமி மகள் அறிவுக்கரசி, ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு முடித்து விட்டு டெல்லிக்கு தேர்வெழுத செல்லும்போது 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு ரூ.2,000/- நன்கொடை அளித்தார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.(ஆர்)

# கோவையில் கழகம் நடத்திய கல்விக் கொள்கைக் கருத்தரங்கம்

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் இந்தியை திணிக்காதே! கல்வியை காவி மயமாக்காதே! என்ற முழக்கத்துடன், புதிய தேசிய கல்விக் கொள்கை வரைவு அறிக்கை 2019 பற்றிய கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் 12.07.2019 அன்று கோவை அண்ணாமலை அரங்கத்தில் மாலை 4:30 மணிக்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்கு நேருதாசு தலைமை வகித்தார். வெங்கட் வரவேற்புரையாற்றினார்.

பா.இராமச்சந்திரன், யாழ் வெள்ளிங்கிரி, இரா. பன்னீர்செல்வம், நா.வே. நிர்மல் குமார், ஜெயந்த், கிருட்டிணன், சிலம்பரசன், வைத்தீஸ்வரி, அஜீத்குமார், சபரிகிரி, தேன்மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதிய தேசிய கல்விக் கொள்கை பற்றிய விரிவான கருத்துரையை, பொதுப்




பள்ளிக்கான மாநில மேடையின் மாநில ஒருங் கிணைப்பாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு வழங்கினார். தமிழ்நாடு மாணவர் கழகத்தின் விஷ்ணு நன்றியுரையாற்றினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## அணுசக்தி எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு – நடுவண் ஆட்சிக்கு எச்சரிக்கை

# அணுக்கழிவு சேமிப்பு வைப்பகத்தை தமிழ்நாட்டுக்குள் திணிக்காதே!

14.07.2019 அன்று சென்னை சேப்பாக்கத்தில் உள்ள செய்தியாளர் அரங்கத்தில் கூடங்குளம் அணுக்கழிவு அபாயம் எச்சரிக்கை மாநாடு காலை 11 மணி அளவில் தொடங்கியது. ஜப்பானில் புகுசிமாவில் ஏற்பட்ட விபத்தைப் பற்றியும் அணுக்கழிவு வைக்கப்பட்டிருக்கும் நான்காவது வளாகம் பற்றியும் விளக்கும் ஆவணப் படமும் பிரான்சில் அணுக்கழிவு பாதுகாப்பு எவ்வளவு அபாயகர மானதாக இருக்கிறது என்பதை விளக்கும் ஆவணப்படமும் திரை யிடப்பட்டது.

பின்னர் அறிவியல் அமர்வு தொடங்கியது. கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்தவரும் பியூசிஎல்-இன் தமிழ் மாநிலத் தலைவருமான தோழர் கண. குறிஞ்சி இவ்வமர்வுக்குத் தலைமை ஏற்றார். கூட்டமைப்பின் நீண்ட காலச் செயல்பாடு குறித்து விளக்கி அமர்வை ஒருங்கிணைத்தார். இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தோழர் தி.வேல்முருகன் தொடக்கவுரை ஆற்றினார். அணுக் கழிவுப் புதைப்பதைத் தடுப்பதற்கு இதை வெகுமக்கள் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் மோடி அரசு ஒவ்வொரு நாளும் தமிழர்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது என்றும் விளக்கிப்பேசினார். அறிவியல் அரங்கத்தில் உரையாற்ற விருந்த வி.டி.பத்மநாபன் அவர்கள் வரவியலாத நிலையில் அவரும் மருத்துவர்கள் ரமேசும் புகழேந்தியும் சேர்ந்து உருவாக்கிய விளக்க அறிக்கையை மருத்துவர் புகழேந்தி விளக்கிப் பேசினார். பின்னர் பூவுலகின் நண்பர்கள் தமிழ்நாடு-புதுச்சேரி அமைப்பைச் சேர்ந்த பொறியாளர் அருண் நெடுஞ்செழியன் பிபிடி மூலமாக அணுக்கழிவு பற்றிய அறிவியல் கருத்துகளைப் பேசினார். இந்தியாவின் முதல் அணுக்கழிவு மையம் இது தானா? மறுசுழற்சி செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா? ஆழ்நிலக் கிடங்கு (Deep Geological Repository) இந்தியாவில் எங்கு அமைக்கப் போகிறார்கள்? அணு உலைக்கு அப்பால் அணுக்கழிவைப் பாதுகாப்பதென்றால் அதற்குப் பின்னான திட்டம் என்ன? ஆகிய கேள்விகளுக்கு தெளிவு காணும் வகையில் மருத்துவர் புகழேந்தியும் பொறியாளர் அருண் நெடுஞ்செழி யனும் உரையாற்றினர். கூட்டத்தில் இருந்தோர் தமது அய்யங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

இடிந்தகரை, கூடங்குளம் போராட்டப் பகுதியில் இருந்து வந்திருந்த தோழர்கள் பங்கேற்ற போராளிகள் அமர்வு உணவு இடைவெளிக்குப் பின் தொடங்கியது. இவ்வமர்வுக்கு கூட்டமைப்பின் ஒருங் கிணைப்புக் குழுவைச் சேர்ந்தவரும் தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் தலைவருமான அரங்க. குணசேகரன் தலைமை ஏற்றார். இவ்வமர்வில் இடிந்தகரையைச் சேர்ந்த சேவியரம் மாள், சுனாமி காலனியைச் சேர்ந்த புனிதா, கூடங்குளத்தைச் சேர்ந்த




கணேசன், தமிழ்த் தேசிய மலைநாடு மக்கள் கட்சியின் தலைவர் இராம சாமி, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் அருள்மொழி ஆகியோர் உரை யாற்றினர்.

சுமார் 4 மணி அளவில் அரசியல் அமர்வு தொடங்கியது. இவ்வமர்வுக்கு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்தவரும் தமிழ்த் தேச மக்கள் முன்னணியின் தலைவருமான மீ.த.பாண்டியன் தலைமையேற்றார். இவ்வமர்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) யின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மதிமுகவின் துணைத்தலைவர் மல்லை சத்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் லெனின், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேரா. ஜவாஹிருல்லா, எஸ்.டி.பி.ஐ. யின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், தமிழக மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம்.செரீஃப், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, தமிழக மக்கள் முன்னணியின் தலைவர் பொழிலன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் செல்லத்துரை, நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் இராஜீவ் காந்தி, தமிழ்ப்புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பேரறிவாளன், த.பெ.தி.க.வின் மாவட்டச் செயலாளர் ச. குமரன், மக்கள் அதிகாரத்தின் வெற்றிவேல் செழியன், ஆதித் தமிழர் கட்சியின் தலைவர் ஜக்கையன், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவின் மாநிலச் செயலாளர் நாகூர் மீரான், தமிழ்த்தேச மக்கள் கட்சியைச் சேர்ந்த தமிழரசன், காஞ்சி மக்கள் மன்றத்தைச் சேர்ந்த தஞ்சை தமிழன், தமிழ்த் தேச குடியரசு இயக்கத்தின் சிவ காளிதாசன், சுயாட்சி இந்தியாவின் துணைத் தலைவர் கிறிஸ்டினா சாமி, அகில இந்திய மஜ்லீஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சம்சுதீன், வெல்ஃபேர் பார்டி ஆஃப் இந்தியாவின் மாவட்டத் தலைவர் முகம்மது கவுஸ், உள்ளிட்டோர் உரை யாற்றினர். தமிழ்நாடு பொது வுடைமைக் கட்சியைச் சேர்ந்த செல்வமணி மாநாட்டுத் தீர்மானங் களை முன் வைத்தார். இடிந்தகரை போராட்டக்காரர் சேவியரம்மாள் நன்றியுரை வழங்கினார்.

கூடங்குளத்தில் அணுக்கழிவு அபாயம் எச்சரிக்கை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. “கூடங்குளத்தில் அணு உலையை மூடு” என மக்கள் போராடியும் வலியுறுத்தியும் வரும் நிலையில் ஆறு அணு உலைகள் கொண்ட அணு உலைப் பூங்கா அமைக்கும் முடிவை இந்திய அரசு கைவிட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
2. பல்லாயிரம் ஆண்டுகாலம் அணுக் கதிர் வீச்சை உமிழக்கூடிய அணுக் கழிவை ஆபத்தின்றி பாதுகாத்து வைப்பதற்கான நம்பத்தகுந்த தொழில்நுட்பம் இன்றளவில் உலகில் எங்கும் இல்லாத நிலையில், கர்நாடகாவில் உள்ள கோலார் தங்கவயல் சுரங்கத்தில் அணுக் கழிவைப் புதைக்கும் முடிவை எதிர்த்துப் போராட்டங்கள் எழுந்ததால் அம்முடிவை இந்திய அரசு கைவிட்ட நிலையில், கூடங்குளத்தில் அணுக்கழிவு சேமிப்புக் கிடங்கு அமைப்பதென எடுக்கப்பட்டிருக்கும் முடிவை இந்திய அரசின் அணுசக்தி கழகம் கைவிட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.
3. கூடங்குளத்தில் அணுக்கழிவு சேமிப்புக் கிடங்கு அமைப்பது பற்றிய கருத்துக்கேட்புக் கூட்டத்தை இராதாபுரத்தில் நடத்துவதாக அறிவித்துவிட்டு அதை பின்னர் ரத்து செய்திருக்கும் சூழலில், இது தொடர்பாக அப் பகுதிவாழ் மக்களிடம் மட்டுமின்றி இது குறித்து அக்கறை செலுத்தி வரும் விஞ்ஞானிகள் மற்றும் அமைப்புகளிடமும் வெளிப்படை யாகவும் நம்பகத்தன்மையோடும் கூடங்குளத்திலேயே கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்த வேண்டும் என இந்திய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.
4. கூடங்குளத்திலோ அல்லது தமிழகத்தின் வேறெந்த பகுதி யிலோ அணுக்கழிவு சேமிப்புக் கிடங்கு அமைக்கக் கூடாதென இந்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட வேண்டும் என தமிழக அரசை இம்மாநாடு கோருகிறது.
5. சூரிய ஒளி, கடலலை, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் களின் வழி மின்சார உற்பத்தி செய்யும் மாற்று எரிசக்தித் திட்டங்களை விரைவுப்படுத்தி அதிக செலவு பிடிக்கும் அதிக ஆபத்து கொண்ட அணுமின் உற்பத்தியில் இருந்து விலகிப் பிற நாடுகளைப் போல் படிப்படியாக அணு உலைகளை மூட வேண்டும் என இந்திய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.
6. கூடங்குளத்தில் அணு உலைப் பூங்கா மற்றும் அணுக்கழிவு சேமிப்புக் கிடங்கு அமைக்கும் முடிவைக் கைவிடுமாறு இந்திய அரசை வலியுறுத்திப் போராட வேண்டும் என இம்மாநாடு தமிழக மக்களுக்கு அறைகூவல் விடுக் கிறது.

- என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

அணு சக்தி எதிர்ப்புக் கூட்டமைப் பின் தலைவராக திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி செயல்பட்டு வருகிறார்.

**– நமது செய்தியாளர்**

## கழகக் கட்டமைப்பு நிதி

| | |
|---|---|
| ஈரோடு மாவட்டம் (தெற்கு) | |
| ஈஸ்வர மூர்த்தி, திருப்பூர் | ரூ. 25,000/- |
| ஆசிரியர் சிவக்குமார், ஈரோடு | ரூ. 20,000/- |
| வேணுமெஸ், மேட்டூர் | ரூ. 20,000/- |
| தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் | ரூ. 15,000/- |
| பவானிடெக்ஸ் பெரியார் தொழிற்சங்க உறுப்பினர்கள் | ரூ. 15,000/- |
| காசிபாளையம் வேலுச்சாமி வழியாக | ரூ. 15,000/- |
| டாக்டர் சக்திவேல் (சக்தி மருத்துவமனை) | ரூ. 10,000/- |
| டாக்டர் சுதாகரன் (சுதா மருத்துவமனை) | ரூ. 10,000/- |
| மா. சீனிவாசன் (தமிழ்நாடு பேக்கர்ஸ்) | ரூ. 10,000/- |
| பெரியசாமி, குன்னத்தூர் | ரூ. 10,000/- |
| கொடிவேரி ஜெயக்குமார் | ரூ. 10,000/- |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th July 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN